DBCY publication

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

# கவிதைகளில் மொழிதல் கோட்பாடு

**முனைவர்.ப.உமா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருப்பத்தூர் – 635901

**ABSTRACT**

Linguistic theory refers to the expressive nature of poetry. This is called proverbial expression and is now called rhetoric, rhetoric, and linguistics. Thus chronological poems have every publishing character and language. This article explores the theoretical application of various theories such as hyper-behaviorism, linguistic imagery, and its types, coding, poetic code, and existentialism.

## ஆய்வுச்சுருக்கம்

மொழிதல் கோட்பாடு என்பது கவிதையின் வெளியீட்டுத் தன்மையினைக் குறிப்பதாகும். இது பழந்தமிழில் கூற்றுமுறை எனவும்இ தற்போது எடுத்துரைப்பியல், உரையாடல்சிந்தனை, மொழிதல்தன்மை எனவும் அழைக்கப்படுகின்றது. அவ்வாறாகக் காலச்சுவடு கவிதைகள் ஒவ்வொரு வெளியீட்டுத் தன்மையையும் மொழிதலையும் கொண்டுள்ளது. அதில் கோட்பாட்டுத்தன்மையில் மிகை நடப்பியல், மொழிதல் படிமம், மற்றும் அதன் வகைகள், குறியீட்டுமொழிதல், கவிதைக் குறியீடு, இருத்தலியம் போன்ற பல்வேறு கோட்பாடுகளைக் கவிதையில் பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## திறவுச்சொற்கள்

4. மொழிதல் கோட்பாடு

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

5. மீமெய்மைப் படிமம்
6. இருத்தலியம்
7. எடுத்துரைபியல்
8. நினைவு படிமம்

**முன்னுரை**

ஒவ்வொரு படைப்பிலக்கியமும் ஒவ்வொரு வகையான வெளியீட்டுத் தன்மையைக் கொண்டு இருக்கும். அதே போல் ஒவ்வொரு படைப்பாளியும் தான் கூற வரும் கருத்துக்கேற்ப ஒரு வெளியீட்டு முறையினைக் கொண்டு இருப்பான். அதே போல் ஒரு படைப்பாளி தன்னுடைய ஒவ்வொரு படைப்பிற்கும் வெவ்வோரு வகையான வெளியீட்டுத் தன்மை கொண்டு, வேறுபட்ட அளவில் படைப்பினைப் படைப்பான். அதாவது ஒரு குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்புகள் தம்முடைய அளவில் நுண்ணிய (Micro) தன்மையுடன் வேறுபட்டு அமையும். இதன் அடிப்படையில் காலச்சுவடு கவிதையில் மொழிதல் கோட்பாடு என்ற ஒரு கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு மொழிதல் தன்மைகள் இந்த இயலில் எடுத்துக்காட்டி விளக்கப் பெறுகின்றன.

**மொழிதல் கோட்பாடு- விளக்கம்**

மொழிதல் கோட்பாடு என்பது கவிதையின் வெளியீட்டுத் தன்மையினைக் குறிப்பதாகும். இது பழந்தமிழில் கூற்றுமுறை எனவும், தற்போது எடுத்துரைப்பியல், உரையாடல் சிந்தனை, மொழிதல் தன்மை எனவும் அழைக்கப்படுகிறது.

இது அடிப்படையில் மொழியியல் சிந்தனைகளைப் பின்புலமாகக் கொண்டது. மொழியியல் சிந்தனையின் ஒரு பிரிவாகிய அமைப்பியல் ஒரு படைப்பின் தன்மை பல்வேறு கூறுகளைக் கொண்டது என்றும், பல்வேறு கூறுகளின் முழுமைதான் அமைப்பு எனவும் கூறுகிறது. மேலும் ஒவ்வொரு நுண்ணிய கூறுகளும் ஒரு அமைப்பே என்றும் இதன் அடிப்படையில் ஒரு படைப்பினை ஆராய்தல் வேண்டும் எனவும் கூறுகிறது. சசூர், பியர்ஸ், வாலஷினோவ் போன்ற மொழியியல் அறிஞர்கள் சிந்தனையை மொழியியலின் அடிப்படையில் முன்வைத்தனர். வாலிஷினொவ் "இருவர் நேர் எதிராக அமர்ந்து சப்தம் எழுப்பி, பரிமாறிக் கொள்வது மட்டுமல்ல கூற்று இருவர் மொழி மூலம் தொடர்புறுத்தும் எல்லாமே கூற்றுதான். மனிதர்களின் கூற்றுக் (மொழிதல்)களில் அவர்களின் முழுக் கலாச்சாரமும் செயல்படுவதை அறிய வேண்டும். இப்படிப் பார்க்கையில் கூற்றின்மூலம் (அதாவது உரையாடலின் மூலம்) சமூக ஆதி படைப்புணர்வு (Primordial Source of Social Creativity) வெளிப்படுகிறது"[1] என்று கூறுகிறார்.

ஒவ்வொரு மொழிக்குறியும் (சொல்லும்) ஒரு குறிப்பிட்ட பண்பினைப் பெற்று உள்ளது. இதனை அம் மொழி இடம்பெறும் சூழலின் அடிப்படையில் புரிதல் அவசியம் என்கின்றனர். மொழியியலாளர்கள், பக்தின் என்பவர் இதனைப் பின்னர் உரையாடலிசம் (Dialogism) என்னும் சிந்தனையாக வளர்த்தெடுத்தார்.

"ஒரு ஆசிரியன் மொழிக்குள் எப்போதும் இன்னோர் ஆசிரியன் மொழி இருக்க முடியும்"[2] என்கிறார். தமிழில் இதனைத் திறனாய்வாளர்களான தமிழவன் க.பஞ்சாங்கம் போன்றவர்கள் விவாதித்து உள்ளனர்.

**தமிழில் மொழிதல் கோட்பாட்டுச் சிந்தனை**

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

பழந்தமிழ் இலக்கியத்தில் அகப் பாடல்களில், கூற்று முறை எனப்படுகிறது.தொல்காப்பியர் இதனைப் பற்றிச் சில வரையறைகளையும் செய்து உள்ளார். பழந்தமிழர் பாடல்களைத் தலைவன் பேசுவதாகவோ அல்லது தலைவி பேசுவதாகவோ, பாங்கன், தோழி, செவிலி இப்படி யாராவது ஒருவர் பேசுவது போலத் தான் படைக்க முடியும்.

அதாவது எடுத்துரைப்பின் மூலம் தான் கருத்தினை வெளியிட முடியும். எடுத்துரைப்பு என்பது எதார்த்தமாக அமையலாம். புனைவாகவும் அமையலாம். இரண்டுமாகவும் அமையலாம்”[3] இது கவிதையில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் அமையும். இது உத்தி அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**காலச்சுவடு கவிதையில் மொழிதல் கோட்பாடு**

மேற்கூறிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் அடிப்படையிலும், உத்தி அடிப்படையிலும் காலச்சுவடுக் கவிதைகள் கீழே விளக்கப்படவுள்ளன.

காலச்சுவடு கவிதையில் மொழிதல் தன்மை கூற்று அடிப்படை மொழிதல், கோட்பாடு அடிப்படையில் மொழிதல் என இரு வகைப்படும்.

1. தான் X தான் எனும் அடிப்படையில்
2. தான் X அவன் எனும் அடிப்படையில்
3. தான் x பொது எனும் அடிப்படையில்

எனும் மூன்று எதிர்வுகளின் அடிப்படையில் கவிதைகள் அமைந்துள்ளன. சில கவிதைகளில் இரண்டு, அல்லது மூன்று எதிர்வுகளுமே அமைகின்றன.

**தான் X தான் எனும் அடிப்படையில் கூற்று**

காலச்சுவடு கவிதைகளில் தான் X தான் என்னும் கூற்றின் அடிப்படையில் உருவான கவிதைகளைக் காண முடிகின்றது.

தான் X தான் இவற்றிற்கான இடைவெளி நிலையில் கவிதை புனையப்பட்டுள்ளது. “தான்” தன்னை முன்னிலைப்படுத்தி ஒன்றைப் புலப்படுத்துவதற்காக எழுதப்பட்ட கவிதைகளாக ஆறு கவிதைகளை: நாம் கூற முடியும். அவற்றில் சிலவற்றைக் கூறலாம்.

இசையின் “பணிமனை” என்னும் கவிதையில் தான் X தானக்கான இழப்பையும், ஏக்கத்தையும் கூறும் விதமாகவும், பறிகொடுத்தல்கள் ஏமாற்றங்கள் இவற்றைப் பணிமனையில் தான் எவ்விதம் அனுபவிக்கின்றேன் என்பதையம் பதிவு செய்கின்றார்.

**கவிதையின் கீழ்க்காணும் வரிகளில் இக்கூற்றை அறிய முடிகிறது.**

**“கடைசியாகக் கால் நனைத்துக்கொள்ள**
**நான் அனுமதிக்கப்படவில்லை**
**முகம் கழுவிக் கொள்ள**
**வாய்பேதும் இல்லை**
**பணிமனை நுழைவாயிலில்**
**கவனமாகச் சோதனையிடப்பட்ட நான்”**[4]

இவ்வாறு கவிதையில் தான் தன்னைப் பற்றிப் பேசும் கூற்று முறை அமைந்துள்ளதைக் காணலாம்.

**தான் அவன் எனும் அடிப்படையில் கூற்று**

தான் அவன் என்ற அடிப்படையில் அமைந்த கூற்று முறை காலச்சுவடு கவிதைகளில் பார்க்க முடிகின்றது.

அழகுநிலாவின் தலைப்பில்லாத கவிதை வரிகளில் தான் அவன் என்ற கூற்று முறை காணப்படுகின்றது.

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

**"நீ குகையைத் தேடி யலைந்தாய்**
**நான் மலையைத் தேயலைந்தேன்**
**தவம் ஒன்றுதான்**
**…………..''[5]**

இந்தக் கவிதை வரிகளில் தன்னோடும் இன்னொரு நபருடனும் இணைந்து பெற்ற அனுபவங்கள், செய்திகள், இடங்கள், காட்சிகள் இவற்றை வரிசைப்படுத்துவதாகவும் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

ஏதேனும் இருவர் நேர் எதிராக இருந்து சம்தம் எழுப்பி, பரிமாறிக் கொள்வது மட்டுமல்ல கூற்று இருவர் மொழி மூலம் தொடர்புறுத்தல் எல்லாமே கூற்று தான் என்று வாலஷினொவ் கூறியதை இங்கு நினைவுப்படுத்திக் கொள்ளலாம்.

தன்னையும் பொதுமை நிலையில் நிற்கின்ற அல்லது இருக்கின்ற ஒன்றையும் இணைத்தோ அதனிடம் கூறும் விதமாகவோ அல்லது அதனைக் கொண்டு கூறும் விதமாகவோ இந்தத் என்ற கூற்றமைப்பானது அமைந்துள்ளது.

சில கவிதைகளைக் கொண்டு இந்தக் கூற்று அமைப்பு முறையை விளக்கிடலாம். அரவிந்த் மாரிச்சாமி கவிதைகளில் "நர்மதையின் சிரிப்பு' என்ற தலைப்பில் அமைந்த கவிதை ஒன்றில் தான் பொது என்ற கூற்றின் அடிப்படையில் கவிதைகள் அமைந்துள்ளன.

**"ஏளனமாய் சிரிக்கும் நர்மதையே**
**சொல்லிவிடு அவற்றுக்கு**
**புனரமைப்பும் மறுவாழ்வு**
**வென்றுவிட்டதை''[6]**

இந்த வரிகளில் கவிஞன் நின்று கொண்டு நர்மதையிடம் உரையாடல் நிகழ்த்துகின்றான். அதோடு பேசுவது மூலம் ஒரு கூற்றை வாசகனுடன் பகிர்ந்து கொள்கின்றான்.

**கோட்பாடு தன்மையில் மொழிதல்**

நவீன மயமாதலின் இலக்கிய வகைகளில் (Genre) கோட்பாடுகள் பிரதிபலிக்கப்பட்டன. கவிதையிலும் இதன் தாக்கம் வெளிப்பட்டது. இது பற்றிய தீவிர விவாதங்கள் புத்தொளிச் சிந்தனைகள் எனப்பட்டன. குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் தோன்றிய தீவிர நெருக்கடிச் சூழல், கடவுள் பற்றிய நன்மைகைத் தகர்வு, மரணம் பற்றிய கேள்வி மதம் பற்றிய மறுபரீசிலனை போன்றவைகளை எடுத்துக்காட்டாய் கூறலாம். இந்த வரிசையில் மற்ற படைப்பாளிகளைப் போலவே காலச்சுவடு கவிதைகளில் படைப்பாளிகளையும், அதன் தாக்கத்திற்குட்பட்டவர்கள் என்ற கருதுகோளை முன் வைத்து இந்த இயலில் மொழிதல் தன்மை ஆராயப்படுகிறது.

**மிகை நடப்பியல் மொழில்**

மிகை நடப்பியல் என்னும் சாரியலிச (ளூரவசளடைஅள) இயக்கம் பிரான்சு நாட்டில் தோன்றியது. இது ஒரு கலை இயக்கம். இலக்கியத்தில் மட்டுமல்லாது ஓவியம், சிற்பம், திரைப்படம் போன்ற பல துறைகளில் வெளிப்பட்டது.

- கொடுக்கப்பட்ட அர்த்தங்களுக்கு மறுவடிவம் தேடுதல்
- அகராதியின் அர்த்தங்களைச் சிதைத்தல்
- மொழியின் சாத்தியக் கூறுகளை ஆராய்தல்

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

- ❖ புற உலக யதார்த்தத்திற்குப் பதிலாக அகஉலக யதார்த்தம் தேடுதல்.
- ❖ மொழியை விடுதலை பெறச் செய்தல்.

போன்றவைகளில் சாரியலிஸ்டுகள் தீவிர ஆர்வம் காட்டினர். எல்லவாற்றையும்விட மனதின் அடியில் உறைந்துகிடக்கும் உக்கிரம், ஆசை, இயலாமை, விருப்பம் போன்றவற்றைப் படைப்புக்களில் வெளிக்காட்டினார்.

அய்யப்ப மாதவன் கவிதைகள் அனைத்தும் இந்த விதமான கோட்பாட்டை முன் வைக்கின்றதாகவே இருக்கின்றன. “36-ஆம் மாடி” என்ற கவிதையில் சமூகத்திலின்று அந்நியமாகிப்போன வெறுமையும் இயலாமையும் தொனிப்பதைச் சான்றாகக் கூறலாம்.

**“இருளின் வாயில்**
**உருவழிழந்து முனகுகிறேன்**
**நெறிக்கும் விதியை நினைத்து**
**…………………**
**உடலிலிருந்து கதறிக் கொண்டு**
**விலகப் பார்க்கிறது**
**நானாகிய மாய நிழல்”** [7]

என்னும் கவிதையில் தனிமனித மனத்தின் உளைச்சலைப் பதிவு செய்யும் விதம் சாரியலிஸத்தின் கூற்றாகவே இதனைக் காண முடிகின்றது.

கனவுகள், கனவுத்தனமான கற்பனைகள், விநோத சாட்சிகள், ஏதேச்சை நிகழ்வுகள், ஏதேச்சை நிகழ்வுளுக்கு முக்கியத்துவம் ஆகியவற்றிக்குப் பயன்படுவதையும் நாம் சாரியலிசக் கூறுகளுடன் உள்ளடக்கிக் காண முடியும்.

காலச்சுவடு கவிதைகளில் பல கவிதைகள் கனவினை மையப்படுத்திக் கொண்டு இருப்பதைக் காண முடிகின்றது. அவற்றை இவ்விதமான சாரியலிசக் கோட்பாடுகளுடன் இணைத்து அறிந்திட முடியும்.

அனாரினுடைய ஒரு கவிதையானது கனவைப்பற்றிக் கூறும் விதம் அமைந்துள்ளது. வண்ணத்துப் பூச்சியின் கனாக்காலக் கவிதை என்ற அந்தக் கவிதையில் சாரியலிசக் கோட்பாடுத் தன்மையிலான மொழிதலைக் காண முடியும்.

**“வாழ்வின் கனாக்காலம் முழுவதும்**
**பருவங்கள் மாறிமாறிப் பறக்கும்**
**வண்ணத்துப் பூச்சிகள்**
**தம் வண்ணங்களால் உயரூட்டுகின்றன”**[8]

வாழ்வின் கனவினை வண்ணத்துப் பூச்சியின் வடிவமாகக் காணும் போக்கினை நாம் காணலாம். விடுதலை பெற்ற மொழியில் அகஉலகமான கனவினை அதன் பயணத்தை எடுத்தும் கூறினர்.

கனவுத்தனமான கற்பனை என்றும் நாம் மேற்கூறிய வரிகளைக் கூறிவிட முடியும்.

**“நாம் அந்தரங்க வெளியில்**
**வானவில் படிந்து உருகிக்கிடக்கும்”**[9]

என்று எழுதும்போது கவிஞர் இங்கே விநோதக் காட்சிகளை முன் நிறுத்துகின்றார். இவ்வாறு கவிதைகளில் சர்ரியலிஸக் கோட்பாட்டைக் காண முடிகின்றது.

பகிர்ந்து கொள்ளாத மாலை என்ற கவிதை இயலாமை, விருப்பம் இரண்டையும் சொல்லும் விதமாகக் காட்சி தருகின்றது.

**“உன் இதமான நெருக்கத்தைப்**
**பருகாது ஆறிய தேநீரிடம்**
**நாம் பகிர்ந்து கொள்ளாத**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

**இம்மாலைப் பொழுது தோல்வியைத் தழுவுகிறது''[10]**

**(படிமம்) மொழிதல் கோட்பாடு**

கவிதைப் படிமம் எனப்படுவது அழகியல் கூறு வாசகனின் ஒன்றிய உணர்வு. விளைவாக ஏற்பட்டு. அதன் மூலம் வாசகர்க்குப் படைப்பை எதிர் கொள்ளத் தேவையான பங்களிப்பினைச் செய்வதாகும். அடிப்படையில் காட்சித் தன்மை கருத்துத்தன்மை ஆகியவற்றின் ஒருங்கிணைவு கொண்டதாகும்.

படிம இயக்கத்தின் முன்னோடிகளாக தாமஸ்ஹியூம், எஸ்ரா பவுண்ட், பிளிண்ட், அமிலோவ் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

கவிஞன் அல்லது படைப்பாளி, தன் படைப்பு, மன நிலையில் எதை வெளியிடக் கருதுகிறானோ, அதனை காட்சியின் மூலம் விளக்கப் படிமம் உதவுகின்றது. சொற்கள் உணர்த்தாத ஆற்றலை வெளிப்படுத்த இயலா உணர்வைப் படிமம் நிறைவு செய்கின்றது. "அரூபமான வார்த்தைகள், செயல் இழந்து போகும்போது அந்த இடத்தை நிறைவு செய்யப் படிமங்களால் மட்டுமே முடியும். அதீத மன நிலைகளை வெளிப்படுத்தும் கவிதைகளுக்குப் படிமம் தவிர்க்க முடியாத உத்தியாகவும் அங்கமாகவும் அமைகின்றது."[11]

கவிதை விடுபடும் சூழலில் படிமம் நிறைவேற்றப்பட்டது. 1909-மார்ச் 25 இல் தொடங்கிய கூட்டத்தில் கவிஞர்களின் மன்றத்தில் படிமம் உருவானது.

நரன் கவிதைகளில் படிமக் கூறுகள் இருப்பதை அறிந்துக்கொள்ள முடியும்.

**''புத்தகத்தின்**
**73ஆம் பக்கம்**
**கிழிக்கப்பட்டிருக்கிறது**
**அதில் தான்**
**தம் கரும்புரவியை**
**மேற்ந்து வரும் படிக்கு**
**அவிழ்ந்து விட்டு இருந்தான் வீரன்''** [12]

இந்தக் கவிதையின் மூலம் படிமம் என்பது வருணிப்பு உத்தியாக மட்டும் பயன்படாது கவிதையை அணுகுவதில், முக்கிய கருவியாகச் செயல்படுகிறது. வாசிப்பின் பரிமாணம் புரிதலின் உணர்வுகளில் பெருக்கி அடுத்த தளத்திற்கு இட்டுச் செல்கிறது.

ஒன்றை வெளியிடும் போது மரபான தொடர்கள். விரிவான விளக்கம் ஆகியவற்றை ஒரு ஒவியம் போல வெளியிடுவதே கவிதைப் படிமம் ஆகும்.

**''புறவழிச் சாலையின் வழியே**
**ஊருக்குள் நுழைகிறது**
**இருள்**
**தன் கழுத்து மணியோசயை**
**எழுப்பியபடியே''**[13]

குறியீட்டுப் படிமம் இயக்கம் சார்ந்த படிமங்கள் என வகை மாதிரிப் படுத்தும்போது குறியீடு சார்ந்து நரன் கவிதைகள் படிமத்தின் மொழிதலில் நிற்கின்றன.

காலச்சுவடு கவிதைகளில் நுண்ணிய அகச் சிக்கல்கள் அகவாழ்வு அனுபவம் புற உலகிற்கு எதிரான மனநிலை போன்றவற்றை வெளிக் காட்டுகின்றது. அவை படிமங்களின் மூலம் கவிதைகளில் காணலாம்.

படிமங்களின் வகைகளாக அணிப் படிமங்கள், குறியீட்டு படிமங்கள், இயக்கம் சார்ந்த படிமங்கள் என வகை மாதிரிகளைப் பகுத்துக் காணலாம்.

ஒவ்வொன்றிலும் ஒரு உட்பிரிவு உண்டு. காலச்சுவடு கவிதைகளில்,

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

- **இடமாற்றுப் படிமம்**
- **வடிவப் படிமம்**
- **மீமெய்மைப் படிமம்**
- **நினைவுப் படிமம்**

என்ற வகையில் படிமங்கள் காணப்படுகின்றன.

**இடமாற்றுப் படிமம்**

இடமாற்றுப் படிமம் என்பது "அ.்.றிணை உயர்திணை, சடப்பொருள் முதலியன எதுவானாலும் ஒன்றின் தன்மை, வினை, பண்பு, ஆகியவற்றை இன்னொன்றிர்க்கு ஏற்றிக் கூறுவது ஆகும்,"[14] வெளிப்படையாகச் சொல்லாது மறைமுகமாக ரூபமாக நுண்ணிய கூறுகளை இடமாற்றின் மூலம் கவிதைகளில் வெளிப்படுவதை இம்மாற்றுப் படிமம் என்று கூறலாம்.

அழகுநிலாவின் கவிதைகளில் இடமாற்றப் படிமம் வருவது தெரிகிறது.

**"பழுத்தாய்த் தேடி வந்தமர்கின்றது**
**கிளி**
**எதுவென்று கேட்க முடியாது**
**காடெங்கும் பாம்புகள்**
**சொல்லித் தீராத கதை**
**ஒன்றும் புரிவதாக இல்லை**
**உயர உயர எழும்புகிறது சுவர்"**[15]

மேற்சொன்னது போலவே இங்கு உயர்திணைகளே இடம்பெறாமல் அ.்.றிணைகளைக் கொண்டு ஒன்றில் ஒன்றை ஏற்றித் தமது கூற்றை இடமாற்றுப் படிமத்தின் மூலம் நிகழ்த்துகிறது.

**வடிவப் படிமம்**

ஏதேனும் ஒரு கருத்தை அல்லது வடிவத்தை விளக்கும் விதமான வடிவ அடிப்படையில் உணர்த்துவது வடிவ படிமமாகும். இப்படிமம் வடிவத்தினை உணர்த்துமாறு அமையும்.

**"மயங்கிச் சரியும் துரோகத்தை**
**அணைத்துக் கொள்கிறாள்**
**சிறுமி"**[16]

சிறுமி என்ற வார்த்தை அவளின் வடிவத்தை தரும் விதமாகப் பிரித்துகத் தனியே எழுதப்பட்டுள்ளது.

வசுமித்ராவின் கவிதையில் வடிவப் படிமம் இருப்பதை மேற்கண்ட கவிதை எழுதப்பட்டுள்ளது.

ஒரு வடிவத்தைக் கவிதையில் காட்சிப்படுத்தி உணரச்செய்கிறது அம்சப்பிரியா கவிதைகளில் இதனைக் காண முடிகிறது.

**"சொட்டச் சொட்ட நனைந்த இரவை**
**காடு வரவேற்று உட்கார்த்தியது"**[17]

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 36-47
ISSN :XXX-XXXX

நனைதலின் நிகழ்வை வடிவப்படுத்திட அதனை வார்த்தையின் மூலம் உருவாக்குகின்றார். சொட்டச்சொட்ட என்ற சொல் நிகழ்வைக் கருத்தாக்கிப் படிமமாக மாற்றுகின்றது.

**மீமெய்மைப் படிமம்**

இயக்கம் சார்ந்த படிமங்களில் மீமெய்மைப் படிமங்கள் காலச்சுவடு கவிதைகளில் காணப்படுகின்றது. மீமெய்மைப் படிமம் (Surrealistic Image) மிக நுண்ணிய சிக்கலான காட்சிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டவை.

புதிய புதிய படிமங்களை வியப்பூட்டும் முறையில் தர்க்க முறையில் இணைய முடியாத பொருள்களை இணைத்துக் காண்பதே மீமெய்மைப் படிமம்.

"இருவேறுபட்ட விளையமுடியா பொருள்களே பொருத்தப் படித்தின் மூலம் இணைத்து வியப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தும். ஏற்படுத்தி மொழியை மாற்றும் வகையை நோக்கமாகக் கொண்டது."[18] இது சிக்கலான மொழியையும் யூகித்து அறிய முடியாத தன்மையினைக் கொண்டு தெளிவற்ற பொருள் உணர்த்துமாறு அமையும்.

**"உறங்க நீ பட்ட பிரயத்தனங்கள்**
**படுக்கையில் கசங்கிக் கிடந்தன**
**அலம்பாத தேநீர் குப்பியில் ஒட்டியிருந்தது**
**உன் எச்சலின் இனிப்பு"**[19]

மா.சு. சரவணன் பொருத்தப்படுத்திச் சுட்டுவதன் மூலம் அதன் வியப்பைத் தருகின்றார். தேநீர்க் குப்பியில் எச்சிலின் இனிப்பு என்று கூறுகையில் வியப்பு வருகின்றது. உறங்குவதற்குப் பட்ட பிரத்தயனங்களை எப்படிக் கசக்கிப் போட முடியும்? ஏன்னும் வியப்பும் உணர்வும், படுக்கையும் ஒன்றை ஒன்று முரணானவை ஒன்று ரூபம், மற்றொன்று அரூபம் இவை இரண்டையும் இணைத்து வெற்றி பெறுகின்றார்.

**நினைவுப் படிமம் (The memory image)**

"நினைவுப் படிமம் என்பது முன் எப்போதோ சேகரித்த நினைவுகளிலிருந்து பெறுவது. இந்நினைவுப் படிமத்தில் புதிய செய்திகள் இருக்காது. இது தெளிவானதும் இல்லை" [20]

நினைவுப் படிமம் சிறு வயதில் அல்லது முன் எப்போதோ சேகரித்த நினைவுகளில் இருந்து திரும்பிப் பார்ப்பது ஆகும்.

இப்படிமங்கள் தொடர்புடையனவாகவும் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். பெரும்பாலும் மாலைக் கவிதைகள் இப்படிம வரையறையில் சார்ந்தவையாகும்.

**"வியர்வை முத்துக்களில்**
**பட்டுத் தெறித்த**
**சூரியனை**
**இருக்கைகளால் மெல்லப் பிடித்துச்**
**சட்டப் பைக்குள் வைத்துக் கொள்கிறேன்**
**உன் நினைவாக"** [21]

இந்தக் கவிதையில் நடந்த நிகழ்வை ஞாபகப்படுத்திடும் சூரியனை நினைவில் சேமித்து வைத்துக் கொள்ள நிகழ்த்தப்படும் ஒரு வித படிமம் நினைவுக்கான இடத்தை நிரப்பும் செயல் நடைபெறுகின்றது. அரவிந்த் மாரிசாமியின் "நினைவுப் பரிவு" என்னும் கவிதை படிமத்தைத் தோற்றுவிக்கிறது.

**குறியீட்டு மொழிதல்**

படிம இயக்கத்தை போலவே குறியியலும் கவிதையின் வெளிப்பாட்டுத் தன்மையில் முக்கிய பங்கு ஆற்றுகிறது. இது மொழியியலை அடிப்படையாகக் கொண்டது. இத்துறை, "உருவவியல் அமைப்பியல் மொழியியல் ஆகியவற்றின் தொடர்ச்சியாக இவ்வியல்களின் கொள்கைகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட புதிய துறையாக தன்னை நிலை நிறுத்தி கொண்டுள்ளது."[22] குறியியலின் அடிப்படை ஒன்றைக் குறித்து வந்து, மற்றொன்றை உணர்த்தி நிற்பது என்பது பொது வரையறையாகும். மேலும் உலகில் உள்ள எல்லாமே குறிகள் தான் என்றும் ஒவ்வொன்றும் குறிகளை உணர்த்தி நிற்கின்றன என்றும் குறியியல் கூறுகிறது. நிகரான இயக்கம், சமயம், சடங்கு, சமூகப் பண்பாடு, சமூக அமைப்பின் பல நிலைகள் போன்றவை குறிகளால் பிணைக்கப்பட்டு உள்ளன என்று குறியியல் கூறுகிறது.

"இலக்கியம் சார்ந்த குறியீட்டியல் என்பது 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த மல்லார்மே (Mallarme) வெர்லெயன் (Varloine) ரிம்பார்ட் (Rimba) போன்ற பிரெஞ்சுக் கவிஞர்களால் விவரிக்கப்பட்ட இல்க்கிய கோட்பாடாகும்"23 பின்னர் உலகமெல்லாம் பரவித் தமிழகத் திறனாய்வு முறைகளிலும் இடம் பெற்று வருகிறது.

**கவிதைக் குறியீடு**

ஒன்றை வேறு ஒரு வகையில் உணர்த்துவது அல்லது புலப்படுத்துவது கவிதைக் குறியீட்டின் அடிப்படை இலக்கணமாகும்.

"கவிதைக் குறி குறியீட்டிற்கும் இதுவே இலக்கணமாகும். குவிதை குறியீடு குறிக்கப்படு பொருளை மறைமுகமாகக் குறியாகவே உணர்த்தும்"[24]

"சொற்களால் விவரிக்க இயலாத ஒரு மௌனநிலையினை உணர்த்தியும் குறியீட்டைப் பயன்படுத்த முடியும் ஒன்றிக்கு ஒன்றை ஒப்பிட்டுச் சொல்லவும் குறியீடு பயன்படுகின்றது."[25]

குறியீடானது சொற்களால் விவரிக்க முடியாதவற்றைப் புலப்படுத்துவற்குப் பயன்படுத்துவதோடு சில சூழ்நிலைகளை மறைக்க வேண்டியதை மறைத்துக் கூறுவதற்கும் பயன்படுகின்றது.

காலச்சுவடு கவிதைகளில் குறியீட்டின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகின்றது என்று கருதலாம். பாலை நிலவன், சைதன்யா, எஸ். நடராஜன் தேவேந்திர பூபதியின் எண்ணுடல் சுகிர்தராணியின் போரின் குறுவாள் போன்ற கவிதைகள் நாம் குறியீட்டுத் தளத்தில் நின்று பார்த்திட இடம் தருகின்றன.

"பாம்பு அறை" என்ற கவிதையில் குறியீடு காட்டப்பட்டு இருப்பதை நாம் காணலாம்,

**"பேரச்சத்தால் பீடிக்கப்பட்டுள்ள**
**நவீன மனக்குறிகள் விதைக்கப்பட்டுள்ளன**
**எழுந்து பயணமாகும் யுவன் யுவதிகள்**
**பூனையாகவே இரவில் கூடடைகின்றார்கள்"**[26]

ஒன்றை எழுதிக் காட்டுவதன் மூலமாக அது அல்லாத பிற ஒன்றைக் கவிதை மூலம் வெளிகாட்ட பூனைகளின் வாழ்முறையைக் குறியீடாகக் காட்டி உள்ளார் பாலைநிலவன்.

சுகிர்தராணி தனது கவிதைகளில் அடுக்காகக் குறிகளைக் கொண்ட அமைப்பில் கவிதையைக் கட்டமைத்து இருக்கின்றார்.

போரின் குறுவாள் என்பது முதல் தலைப்பில் இருந்து கவிதையின் இறுதிவரை அவர் குறியீடுகளைப் பயன்படுத்தித் தாம் சொல்லாத கருத்தை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றார். மறைமுகமாக வைத்திருக்கிறார் கவிதைகளில் அவை காணக்கிடைக்கின்றன.

**"மீன்கள் புரளும் கழிமுகத்தைப் போல்**
**குறுவாள்கள் நிறைந்திருக்கின்றன**

தொகுதி: 01 இதழ்: 01 ஜூலை2021 36-47
ISSN :XXX-XXXX

**என் பாசறையில்**
**இரத்தம் பார்க்கக் காத்திருக்கும்**
**பசித்த புலியின் பற்களென**
**ஒன்றை ஒன்று குத்தி**
**வெளியேற்றிக் கொள்கின்றன''**[27]

இங்கு இவர் கூறும் பாசறையும், குறுவாள்களும் அவற்றின் பசியை விவரிப்பதற்காக அவர் பயன்படுத்தும் கொடூரப்புலியின் பற்களும் ஏதோ ஒருவித அரக்கத்தனத்தை வெளியிட முடியாத மன உக்கிரத்தைச் சொல்வதாகவே நினைக்க முடியும். பெண்ணுக்கு எதிரான ஆணாதிக்கச் சிதைவுகளைக் குறியீட்டின் மூலமாகக் காணலாம். தலித்தின் வலியைப் பிரயோகிக்கும் ஆயுதமாகவும் கொள்ளலாம். இவ்வாறு குறியீட்டின் அர்த்தங்களை உருவாக்க முடிகிறது.

**இருத்தலியம்**

இருத்தலியம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய கோட்பாடாகும். மனித வாழ்க்கை குறித்த கேள்வி சாவு, முதுமை இழப்புணர்வு மரணம், விபத்து போன்றவை பற்றிப் பேசுகிறது. வாழ்வின் சிக்கலான காலக்கட்டம் பற்றியும், அவற்றில் மனிதன் எதிர்கொள்ளும் சூழல் பற்றியும் இருத்தலியம் பேசுகிறது.

இருத்தலியம் பற்றிச் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் "இருத்தலியம் அகவயமானவற்றையும், புறவயமானவற்றையும் இணைப்பது முழுமையும் தற்காலிகமானவற்றையும் இணைப்பது நிரந்திரமானவற்றையும், வரலாற்று ரீதியானவற்றையும் இணைப்பது."[28] என்று கூறலாம்.

வாழ்வின் முழுவதும் ஆன உண்மை பற்றியும், அவ்வாழ்வினை எதிர் கொள்ளும்போது மனிதன் சந்திக்கும் சிக்கல் நெருக்கடி, பிரச்சனைகள் பற்றிப் பேசுகிறது. மேலும் இருத்தலியம் மனித அவலம் மனிதத் துயரம் பற்றி முதன்மையாகப் பேசுகிறது. மனிதன் தன் துயரத்திலிருந்து வேதனையிலிருந்து விடுபடத் தெரியாதவனாக இருக்கிறான் என்று இருத்தலியம் கூறுகிறது. சோரன்கிர்க்கே கார்டு இருத்தலியச் சிந்தனையாளர்களுள் முதன்மையானவர் ஆவார். கைடெக்கர். ழான்பவுல் சார்த்தர், மார்ட்டின், ப்யூபர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

கவிதைகளில் இருத்தலியல் கூறுகள் காணப்படுகின்றன. மரணம் பற்றியப் பேசப்படுகின்ற கவிதைகள் காலச்சுவடு கவிதையில் காணப்படுகின்றன. அவை மனிதனின் இருப்பைக் கேள்விக்கு உட்படுத்தும் விதமாகக் குறியீட்டுப் பண்பில் அமைந்து காணப்படுகின்றன.

இருத்தலியம் கடவுளின் இறப்பைப் பற்றியும் பேசுகின்றது. நீட்சேயை இங்கு நாம் குறிப்பிட முடியும். அவ்வாறு நாம் நோக்குகையில் பொ.செந்திலரசுவின் 'தனியாய் அலையும் கடவுள்' என்ற தலைப்பின் கீழ் உள்ள கவிதையில் மனிதனுள் இருக்கும் கடவுள் தனியனாய் அலைவதாகவும் கடவுளில் இருந்த மனிதன் வேட்டையாடி கடவுளைக் கொலை செய்யப் பார்ப்பது போல காட்சிப்படுத்துகிறார்.

**"பழுத்த இலையன உதிர்கின்றன**
**நாட்கள்''** [29]

வாழ்வின் ஒன்றுமில்லா தன்மையினை இக்கவிதை வரிகள் விவரிக்கின்றன.

தேவேந்திர பூபதி தனது கவிதைகளில் இருத்தல் பற்றின சிந்தனைக்குரிய நம்பிக்கையை விளக்கும் விதமாகப் "பறவைகளின் பாடலுக்குத் திரும்புவது" என்ற கவிதை மூலம் சொல்ல விழைகின்றார். வாழ்வின் இழந்த நம்பிக்கையை மீண்டும் துளிர்க்கச்

செய்வதும் விடுதல் அறியா விருப்பைப் பற்றிப் பேசுவதும் இருத்தலியலின் உள் கூறுகளாகக் கொண்டிட முடியும்.

**“அழைப்புகளில் வஞ்சகம் மறையவில்லை**
**உனது வானம் மழையை மையமிடவில்லை**
**நதிகளிலே அசுத்தங்கள் கலக்கின்றன**
**இருப்பினும் திரும்புவாய்**
**பறவைகளின் பாடலுக்கு”**[30]

தற்காலத்தைய இருத்தலின் நிலையைச் சொல்லி அதனின் நேர் முரணாக மீண்டும் புதிய வாழ்வுக்கு மனிதனையும் இயற்கையும் கொண்டு வாழும் வாழ்க்கைக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

அம்சப்பிரியா தனது கவிதைகளில் இருத்தலின் அபத்தத் தன்மையைப் பதிவு செய்கின்றார். இருத்தலின் கேள்வியாக இருத்தலியம் முன்வைப்பது மனிதன் வாழ்வதா? சாவதா? என்பதுதான் அந்தக் கேள்விக்கு இறப்பே என்று பதில் தருவர்களும் உள். அந்த வகையில் இவரை அணுகிட முடியும். தலைப்பு இடப்படாத ஒரு கவிதையில் இவ்வாறு பதிவு செய்கிறார்.

**“அடர்ந்த மரங்களின் இரைச்சலில்**
**மனம் பேதலித்த இரவு**
**மலையுச்சியிலிருந்து குதித்து,**
**தன்னை மாய்த்துக் கொண்டதை”**[31]

வாழ்வின் பேதலித்துப்போன பொழுதுகளும், நாட்களும் தற்கொலை செய்யத்தூண்டும். இருத்தலின் போக்கையும், மனத்தின் வெளிப்படாகக் காட்டி இருக்கின்றார்.

இன்றைய இருத்தலியளார்கள் வாழ்வு அபத்தம் நிறைந்தது என்பதைப் பதிவு செய்கின்றார்கள். அதனையே தனது கவிதையிலும் பதிவு செய்கின்றார் அம்சப் பிரியா.

**அடிக்குறிப்பு**

1. தமிழ்வன், தமிழக் கவிதையும் மொழிதல் கோட்பாடும், ப.18
2. மேலது., ப.20
3. பஞ்சாங்கம், நவீன கதைகளில் எடுத்துரைப்பியல், ப.6
4. இசை, பணிமனை, காலச்சுவடு 93, செப்டம்பர் 2007, ப.43.
5. அழகுநிலா, காலச்சுவடு 89, மே 2007. ப.39
6. கோகுலக் கண்ணன், நர்மதையின் சிரிப்பு, காலச்சுவடு 87, மார்ச் 2007. 26
7. அய்யப்ப மாதவன், 36-ம் மாடி, காலச்சுவடு 86, பிப்ரவரி 2007.ப.15
8. அனார். வண்ணத்துப் பூச்சிகள் கனாக்காலக் கவிதை. காலச்சுவடு 94, அக்டோபர் 2007. ப.37.
9. மேலது. ப.37
10. அனார், பகிர்ந்து கொள்ளாத மாலை, காலச்சுவடு 94, அக்டோபர் 27.ப.37.
11. மு.சுதந்திர முத்து, கவிதை படிமம். ப.445.
12. நரன் காலச்சுவடு 92, ஆகஸ்ட் 2007.ப.41.
13. மேலது.,
14. மு.சுதந்திரமுத்து, தமிழ்ப்புதுக்கவிதை வடிவங்கள்.ப.226.
15. அழகு நிலா, காலச்சுவடு 93, ஆகஸ்ட் 2007,ப.38.
16. வசுமித்திர, காலச்சுவடு 90, ஜீன் 2007,ப.27.
17. க. அம்சப்பிரியா, காலச்சுவடு 88, ஏப்ரல் 2007, ப.20
18. மு. சுதந்திரமுத்து. குவிதை படிமம், ப.61.

19. ம.சு.சரவணன், உன்னை நிறைத்த அறை, காலச்சுவடு 88, ஏப்ரல் 2007,ப.21.
20. மு. சுதந்திரமுத்து, கவிதைப் படிமம், ப.40
21. அரவிந்த் மாரிசாமி, நினைவுப் பரிவு, காலச்சுவடு 87, மார்ச் 2007, ப.27.
22. ந.ம.வீ.ரவி, குறியியலும் அரங்கக் குறியியலும், ப.1
23. சி.வ.மங்கையர்க்கரசி, இலக்கிய இயக்கங்கள்,ப.64.
24. அப்துல் ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு.ப.59.
25. மேலுது., ப.38
26. பாலைநிலவன், பாம்பு அறை, காலச்சுவடு 89, மே 2007,ப.19.
27. சுகிர்தராணி, போரின் குறுவாள், காலச்சுவடு 85, ஜனவரி 2007, ப.20.
28. ந. முத்துமோகன், ஐரோப்பியத் தத்துவங்கள், ப.170.
29. பொ. செந்திலரசு, தனியாய் அலையும் கடவுள், காலச்சுவடு 96, டிசம்பர் 2007, ப.41.
30. தேவேந்திர பூபதி, பறவைகளின் பாடலுக்குத் திரும்புவது, காலச்சுவடு 95, நவம்பர் 2007,ப.46.
31. அம்சப்பிரியா, காலச்சுவடு 88, ஏப்ரல் 2007, ப.20